Registered as News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 27 (13 - 11 - 1991) புதன்கிழமை ஓசை: 268

## நேரசூசியில் மாற்றம்; பாடசாலைகளில் தடுமாற்றம்

க. பொ. த. (சா த) முன்னோடிப் பரீட்சை நேரசூசியில் செய்யப்பட்ட மாற்றம் உரிய காலத்தில் அறிவிக்கப்படாமையால் பல பாடசாலைகளில் தடுமாற்றம் நிலவியது. நேற்று நடைபெறவேண்டிய கணிதப் பரீட்சைக்குப் பதிலாக தொழில் நுட்ப பாடங்கள் நடப்பதாக நேரசூசியில் மாற்றம் செய்யப்பட்டது. நேற்றுக்காலை 8 மணிக்கு சில பாடசாலைகளில் கணித வினாப்பொதிகள் திறக்கப்பட்டு பரீட்சார்த்திகளுக்கு வினாத்தாள்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆவேசம் கொண்ட தொழிலாளர்கள்

# யாழ். செயலகம் மீது பாய்ச்சல்

இலவச இணைப்பு 1982 தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார தடையை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் பொருளாதார தடையை எதிர்த்தும், நிவாரணம் கோரியும் நேற்று பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் யாழ். நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர்.

உணர்ச்சிவசமடைந்த ஒருபகுதி தொழிலாளர்கள் யாழ். செயலகத்திற்குள் பிரவேசித்து பெரும் ரகளையில் ஈடுபட்டனர். அரசாங்கத்திற்கு எதிரான கோசங்களை எழுப்பினர். இந்த அமளி துமளி காரணமாக யாழ் செயலகம் பல மணி நேரம் செயலிழந்தது.

பொருளாதாரத் தடையை எதிர்த்தும், நிவாரணம் கோரியும் இருபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் யாழ். நகரப் பகுதியில் நேற்று நிகழ்ந்தன.

வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர் சங்கமும், கடற்தொழிலாளர் சங்க ஒன்றியமும் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை யாழ். நகர சத்திரச் சந்தியில் இருந்து செயலகம்வரை நடத்தின.

இரண்டாவது ஊர்வலத்தை யாழ். மாவட்ட கடற்தொழிலாளர்கள் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் கோண்டாவிலில் ஆரம்பித்து யாழ் செயலகத்தில் முடிவடைந்தது.

யாழ் செயலகத்தை சென் (4 ஆம் பக்கம் பார்க்க)

## "உணவைவிடு அல்லது பிரியவிடு"

## உலக விடுதலை வீரர்களுக்கு பெருமை சேர்க்கும் மாவீரர்

"ஒரு இராணுவ வீரனுக்கும் ஒரு விடுதலைப் போராளிக்குமிடையே நிறைய வித்தியாசங்களுண்டு. களத்தில் இருவருமே போரி புரிகின்றனர். இருவருமே மரணிக்கின்றனர். ஆனால், இருவரின் மரணங்களிலும் பெறுமதிகள் வித்தியாசமானவை." இவ்வாறு தமிழீழ மாவீரர்நாள் தொடர்பாக மாவீரர் நாள் பணிமனை விடுத்த செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் அக்குறிப்பில், ஒரு பேரினவாத அரசானது இராணுவத்தை தமது அரசியல் நோக்கங்களுக்காகப் பொம்மையாகவே பாவிக்கும். அந்த இராணுவத்தில் சேரும் ஒவ்வொரு இளைஞனும் உணர்வுரீதியாக படையில் சேர்வதில்லை. அதனை ஒரு நோக்கமாகவும் கருதியே சேருகிறான். இயந்திரமாக கையாளப்படுகிறான் எனவே, அவனது மரணமும் சாதாரணமான ஒரு நிகழ்வாகிவிடுகின்றது. ஒரு விடுதலைப் போராளியின் வரலாறு அவ்வாறனதல்ல. உணர்வுரீதியாகவே அவன் போராளியாகி (3 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திகள் தோறும் மாவீரர் வளைவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் பிரதான சந்திகளில் நிமிர்ந்து நிற்கின்றன மாவீரர் வளைவுகள்.

இளைஞர்கள், யுவதிகள், சிறுவர் சிறுமியர், முதியோர் என்ற பாகுபாடின்றி அனைவரும் மாவீரர் அலங்கார வேலைகளைச் செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர்.

நான்கு பக்க பந்தல்கள் வீதி வளைவுகள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன. இதே போல் மாதகல், பண்டத் 3 ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கிச் சூடு எறிகணை தாக்கு

கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இறி

தொழிலாளர் சங்கமும், கடற் ... இரண்டாவது ஊர்வலத்தை ... (4ஆம் பக்கம் பார்க்க)

# "உணவைவிடு அல்லது பிரியவிடு"

தமிழர் அனைவரும் சிறிலங்கா அரசின் மக்கள் என ஜனாதிபதி பிரேமதாசா கருதுவாரேயானால் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ள எங்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்க வேண்டும் இன்றேல் நாங்கள் பிரிந்து சென்று எமது தேவைகளை நாமே பூர்த்திசெய்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என கோசம் எழுப்பியவாறு ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று யாழ். செயலகத்தில் ஆர்ப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தொழில் செய்ய அனுமதிக்குமாறு கடற்தொழிலாளர் கோரிக்கை

கரையோரத்தில் இருந்து ஐந்து மைல் தூரத்திற்கு கடல் பிராந்தியத்தை அமைதிப் பிரதேசமாக்குமாறும் பொருளாதாரத் தடையை நீக்குமாறு கோரியும், யாழ். மாவட்ட கடற்தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

யாழ். நகரில் நடைபெற்ற இரண்டாவது ஆர்ப்பாட்ட ஊர்வலம் இதுவாகும்.

கோண்டாவில் சந்தியில் இருந்து ஆரம்பமாகி பலாலி வீதி ஊடாக பிரதான வழியாக யாழ். செயலகம் வந்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கஷ்ட நிவாரணம் கோரி வங்கி ஊழியர் ஊர்வலம்

பதினெட்டு மாதங்களாக வழங்கப்படாதுள்ள கஷ்டநிவாரணப் படியை வழங்கக்கோரி யாழ் அரச வங்கி ஊழியர்கள் நேற்றுக்காலை ஊர்வலம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# உணவு நெருக்கடி; பட்டினி நிலை; யாழ். மாவட்டத்தில் ஏற்படும் அபாயம்

## தேவநேசன் நேசையா தெரிவிப்பு

யாழ். மாவட்டத்திற்கு பெரும் உணவுப்பொருள் நெருக்கடியும், பட்டினி நிலையும் தோன்றுவதற்குச் சந்தர்ப்பம் உள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையா தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திற்கான தரைவழியான உணவு விநியோகம் தடைப்பட்டிருக்கின்றது அத்துடன் எதிர்வரும் பருவநிலை மாற்றம் தற்போதிருக்கும் கடல்வழியிலான உணவு விநியோகமும் தடைப்படும் அபாயம் உள்ளது

இந்த நிலையில் காங்கேசன்துறை துறைமுகப்பகுதியை உணவுப்பொருள்களைத் தருவிப்பதற்காக திறக்கப்படுதல் அவசியம் என்றும் தெரிவித்தார்.

(3ஆம் பக்கம் பார்க்க)

யாழ் நோக்கங்களுக்காகவைப் பெரும்பாலுமாகவே பாவிக்கும். அந்த இராணுவத்தில் சேரும் ஒவ்வொரு இளைஞனும் உணர்வுரீதியாக படையில் சேர்வதில்லை. அதனை ஒரு தொழிலாகவும் சம்பளத்தை

சிறுவர் சிறுமியர், முதியோர் என்ற பாகுபாடின்றி அனைவரும் மாவீரர் அலங்கார வேலைகளைச் செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரியாலை தபால்கட்டை சந்தியில் பிரமாண்டமான

## வன்னியில் பரவலான விமானக்குண்டு வீச்சு

வன்னிப்பகுதியில்சிறிலங்கா விமானப்படை விமானங்கள் பரவலான குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன நேற்று முன்தினமும் நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சினால் பாலமோட்டை 29 ஆம் யூனிட்பகுதியில் ஒரு கோயில், இரு வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளதுடன் அறுபது வயதான இராசதுரை என்பவர் படுகாயம் அடைந்துள்ளார் நேற்றுக் காலையிலும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அர. சார். நிறுவனங்கள் நேசையாவிடம் மகஜர்

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு, தேவநேசன் நேசையா அவர்களிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

இம் மாவட்டத்தின்

★ உணவு, மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சவர்க்கார விநியோகம் நேசையா நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பங்கீட்டு அடிப்படையில் சவர்க்காரமும் சவைக்காரமும் சவர்க்காரமும் ... சலவைத் தூளும் அடிமட்ட விலையில் விற்பனை செய்யப்படவிருக்கின்றது.

வடகிழக்கு மாகாண அத்தியாவசிய ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையாவின் பணிப்பின் பேரில் மேற்படி விநியோகம் நடைபெற உள்ளது

(3ஆம் பக்கம் பார்க்க)

துப்பாக்கிச் சூடு எறிகணை தாக்கு

கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் அதிகாலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## நூறு ரூபா சம்பள உயர்வு

மாதாந்தம் மூவாயிரம் ரூபாவிற்கு குறைவான வருமானத்தைப்பெறும் அரசாங்க உள்ளூராட்சிஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கும் ஜனவரி முதலாம் திகதி முதல் மாதாந்தம் நூறு ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது என 1992 ஆம்ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## சிறிலங்கா கலந்து கொள்ளும்

புதுடில்லியில் நாளை தொடங்கி இம் மாதம் இருபத்து நான்காம் திகதிவரை நடைபெறவிருக்கும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் சிறிலங்காவும் கலந்து கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீரவணக்கம்

செங்கதிர்

தீவகத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு பின்னர் அங்கிருந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

# 5-11-91-27-11-91 வரை மாவீரர் கொடி வாரம்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 1992

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1991 டிசம்பர் 31 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**வழங்கல்கள் :-**

1 எழுது பொருள்கள்
2 புத்தகங்கள், பருவ வெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
3. அலுவலக தளபாடம் - மரம்
4. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
5. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள் கல்குலேட்டர்கள் றோனியோவண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
6. சலவைக்கை ஹாட்வெயார் பெயின்டுகள், வார்னிஷ்
7. இயந்திர கருவிகளும், உதிரிப்பாகங்களும்
8. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
9. வெட்டும் கருவிகள் மட்பாண்டங்கள் உட்பட சமையலறை பாத்திரங்கள்.
10. ஜவுளிகள், படுக்கை விரிப்புகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வு கூடசாதனங்கள் இரசாயனப் பொருள்களும் கண்ணாடிப் பொருள்களும்
12. மரம்
13 கட்டிடப்பொருட்கள் (மணல்,செங்கற்கள்உலோகம் சுண்ணாம்பு முதலியவை)
14 தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புக்களும்
17. ஆயுர் வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19 விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்
20. தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்புசாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துகள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புகளும்
23 பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மட்பாண்டப்பொருள்கள், கண்ணாடிப்பொருள்கள் கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், சருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புகள்

சேவைகள்:

...கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் / சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா 150/- பெறுமதியான, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் என்ற பெயர்க்கு பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளை யையும் இணைத்து அனுப்பவேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலை மனுக்களைக் கோரும் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்களை, சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களை கொண்டிருக்கவேண்டும்

# வாராந்த கொடுப்பனவை இருகிழமைக்குள் பெறலாம்

பங்கீட்டு உலர் உணவு வாராந்த கொடுப்பனவுகளை இரண்டு வாரங்களுக்குசெல்லுபடியாக்கியுள்ளதாகவும் எவரும் தமது உலர் உணவுப் பொருள்களை அந்தந்த வாரமே பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது கணக்கில் போதிய இருப்புப் பணம் இல்லாதுவிட்டாலும் ரூபா ஆயிரத்துக்கு மேற்படாத பணத் தொகைக்கு உரிய பொருள்களை அந்தந்த ப. நோ. கூ. சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுவை அரச அதிபரும், புனர்வாழ்வு அமைச்சின் உதவிப்பணிப்பாளர் அவர்களும் தெரிவித்துள்ளதாக சம்மேளனத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

**ஜீவிதா**
**தொழில் நுட்பக் கூடம்**

ரீ. வி. டெக், றேடியோ, மணிக்கூடு, திரைவண்டிகள் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் வீடியோவிடில் படப்பிடிப்பாளர்களும். புதிய வகையபாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (B/3439

**புதிய உயர் கல்லூரி.**
**New College of High Studies**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

A/L 91 சனி, ஞாயிறு வினா விடை வகுப்புக்கள்
ஆரம்பம்: 16.11.91
A/L 92 Day Classes
ஆரம்பம்: 18 11.91
(மாலை 8·00 மணி)
A/L 91 Day Classes
வினா விடை வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன
A/L 93 மாணவர்களுக்கு O/L வகுப்பிற்கான இலவச வினா விடை வகுப்பு
ஆரம்பம்: 18.11.91
(B/3468)

# யெல்சினின் தீர்மானத்தை பாராளு. நிராகரித்தது

(மொஸ்கோ)

ரஷ்ய கூட்டமைப்பின் தென்பகுதி காக்கேசஸ் மலைப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் செச்சின் இரைசித்தியா மீது அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்த பொறிஸ்யெல்சின்முன்வைத்த தீர்மானத்தை அங்கீகரிக்க ரஷ்யப் பாராளுமன்றம் மறுத்து விட்டது. செச்சின் இன்ரசித்தியாவுடனான பிணக்குகளை அரசின் அனுகுமுறையிலேயே தீர்க்க வேண்டும் என்ற தீர்மானம் அதிகப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

செச்சினுடன்சமரசப்பேச்சு வார்த்தை நடத்தவும் குழு ஒன்றைப் பாராளுமன்றம் நியமித்தது.

காக்கேசஸ் நெருக்கடி பற்றி விவாதிக்கக் கூடிய அவசரக் கூட்டத்தில் அவசர காலச் சட்டத்தைநிறைவேற்றி செச்சினை ரஷ்யாவின் நேரடி ஆட்சிக்குக் கொண்டு வரும் பொறிஸ் யெல்சினின் முயற்சி தோல்வியில் முடிந்தது.

இதே வேளை ரஷ்யக் குடியரசின் சுய ஆட்சி பெற்ற செச்சியன் இங்குஷ் குடியரசில் நெருக்கடிநிலையை அமுலாக்க ரஷ்யத் தலைவர் பொறிஸ் யெல்சினால் அனுப்பப்பட்ட இராணுவத்துருப்புக்கள் மக்கள் இயக்கத்தால் முன்னதாக திருப்பி அனுப்பப்பட்டது.

இதேநேரம் ரஷ்யக் குடியரசின் உள்துறை அமைச்சர் இப்ராகிமோவ் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். சுய ஆட்சி பெற்ற செச்சியன் இங்குஷ் குடியரசில் நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதை எதிர்த்தே இவர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மன்னார் தீவில் சிக்கிய பல்கலைக்கழக மாணவர்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பலர் மன்னார்தீவில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியிருக்கிறார்கள். புதிய கல்வி ஆண்டின் சகல பீடங்களையும் சேர்ந்த இம் மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகியும் கூட இவர்கள் அங்கிருந்து வெளியேற முடியாத நிலையில் உள்ளனர். இவர்களை மீட்கும் முயற்சி இதுவரை வெற்றியளிக்கவில்லை.

(ஈ)

# வெளிவாரி பட்டப்படிப்பு யாழ். பரீட்சை இல்லை

வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெற மாட்டாது.

வடபகுதி மாணவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்திலேயே இம்முறை பரீட்சை எழுத வேண்டும் என்று யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் நிலைமையை சுட்டிக் காட்டி தற்போதைக்கு இங்கு பரீட்சை நடாத்துவது சாத்தியமற்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(நி)

நினைவு ...

23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மட்பாண்டப்பொருள்கள், கண்ணாடிப்பொருள்கள் கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், சவர்க்காரங்கள்
26. எக்ஸ்ரே எக்ஸ் உள் உறுப்புகள்

## சேவைகள்:-

1. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள் X திகதி ஸ்டாம்புகள்
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்தவேலைகள்
3. றிபிறியேட்டர்கள், ஏயர் கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும், பராமரிப்புகளும்
4. வீட்டுத் தளபாடங்களின் திருத்தவேலைகள்
5. மரத்தளபாடங்களுக்கான திருத்தவேலைகள்
6. கதிரைக்கு பின்னல்
7. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
8. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
9. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் 'பைண்டிங்' செய்தல்

## எந்திரவியல் சேவைகள்:

01. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
02. மின்மோட்டார்கள், மின்பிறப்பிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
03. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டிடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
04. மின்சார வயறிங் வேலைகள்
05. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் / திருத்த வேலைகள்
06. இரும்புக் கிறில்கள் / கேற்றுகள் உருவமைத்தல் / பொருத்தல்
07. கட்டிடங்கள் / கட்டிட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திரசாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்.
08. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல்/பொருத்துதல்

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள்/சேவைகள் 1992' எனக்குறிப்பிடப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

01. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்படவேண்டும்.
02. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப்பல்

/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரும் பெயர்களும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்கவேண்டும்

1) விண்ணபிக்கும் வழங்கல் அல்லது சேவை.
2) பெயரும் விலாசமும்
3) தொலைபேசி இலக்கம்
4) வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
5) வியாபாரத்தின் தன்மை
6) வங்கியாளர்களின் பெயர்
7) கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்

குறிப்பு:-
எந்திரவியல் சேவை 6 க்கு பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

அ) ICATD தரப்படுத்தலின் கீழ் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப்புத்தகத்தின் போட்டோ பிரதி / அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

ஆ) இலங்கை கட்டிடங்கள் திணைக்களத்துடன் பதிவு செய்துள்ள அல்லது கட்டிடத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகுதிகாண் கடிதம் வைத்திருப்பவர்கள் (கட்டிடங்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

இ) ஏனையோர் ICTAD/ID 102 (இருபிரதிகள்) ICTAD /ID 01 ஐயும் ICTAD 123 விஜயபராமமாவத்தை கொழும்பு -7 என்ற முகவரியில் இருந்து கொள்வனவு செய்து அதற்கேற்ப விண்ணப்பிக்க வேண்டும்.

ஈ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி / வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும். அத்துடன் அம்மாவட்டங்களில் உள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்துக்குரிய வியாபாரப்பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டிடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (7 இற்கு மட்டும்) தருக.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(B/3447)

# நினைவு கூருகின்றோம்...

## 1991 11 -13

1985 ஆம் ஆண்டு இருதயபுரம் இறால்குழிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

கேதீஸ் (சண்முகம் ஜெகதீஸ்வரன் - சந்தனாப், திருக்கோணமலை)

1988 ஆம் ஆண்டு திருக்கோணமலை, தம்பலகாமம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய

2ஆம் லெப். ஜெயசீலன் (காளியப்பு நாககணேசலிங்கம் - தம்பலகாமம், திருக்கோணமலை)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட திருநெல்வேலி, வளாக வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் (சுந்தரம் மகேந்திரநாதன்)

அரியாலையில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு, மாம்பழம் சந்தியில் சடலமாக மீட்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்

வல்வெட்டித்துறை - பொலிகண்டி பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு மணியந்தோட்டம் பகுதியில் சிறிலங்காப் படையினரின் விமானக் குண்டு வீச்சினால் காயமுற்று வீரச்சாவெய்திய

கதிர் (முத்துக்குமாரு ஜங்கரன் - வட்டுக்கோட்டை மேற்கு, சித்தன்கேணி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3467)

**சிந்தனைக்கு**

மனிதர் பிறந்தது வெற்றிபெற; தோல்வி அடைய அல்ல.

— ஹென்ரி டேவிற் தோரோ

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 13-11-1991

தொலைபேசி

ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208

த. பெ. எண் 05

# மண்ணுடன் போராடுவோம்

**யாழ்.** மாவட்டத்தின் உணவுக் கையிருப்பு அற்றுப் போய் விட்டது. கப்பல் வந்தால் தான் உணவு என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், இது தொடர்பாய் சிறிலங்கா அரசாங்கம் அக்கறை காட்டுவதாய் இல்லை. இனிமேலும், பெரிதாய் அக்கறை காட்டும் என எதிர்பார்க்க முடியாது.

சிறிலங்காப் பேரினவாத அரசாங்கம் தமிழரின் தேசிய இனப் போராட்டதை நசுக்குவதற்காக எவ்வாறான இரக்கமற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தயாராக இருக்கும் என எதிர் பார்க்கப்பட்டதுதான். இராணுவரீதியாக போராட்டத்தை வெற்றி கொள்ள முடியாத நிலையில் பொருளாதாரத் தடையையும், அதைத் தொடர்ந்து உணவு நெருக்கடியையும் திட்டமிட்டு சிறிலங்கா அரசாங்கம்ஏற்படுத்தியுள்ளது.

இது சிறிலங்கா பேரினவாத அரசாங்கம் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் இறுதி யுத்த வடிவம் என்றே கொள்ளலாம். இதில் தமிழ் மக்கள் வெற்றி பெற வேண்டுமானால் மக்கள் அணி திரண்டு மிகவும் தீவிரமாகவும்முனைப்பாகவும் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

யாழ். மாவட்ட மக்கள் 1974, 1975ஆம் ஆண்டுகளிலும் பெரும் உணவு நெருக்கடிக்கு முகம் கொடுத்து தீவிரமாகப் போராடி வெற்றி கண்டவர்கள். உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கி பட்டினிச்சாவு ஏற்படாமல் தவிர்த்துக் கொண்டவர்கள். ஆனால், முன்பிருந்ததைவிட தற்பொழுது நிலைமை சற்றுக் கடினமானதென்பது உண்மை. ஆனால், தீவிரமாகப் போராடினால் வெற்றி நிச்சயம்.

கடந்த வருடம் போர் தொடங்கியதைத் தொடர்ந்து பொருளாதாரத் தடைக்கு அடுத்த கட்ட நடவடிக்கையாக உணவு நெருக்கடியைச் சிறிலங்கா அரசாங்கம் தோற்றுவிக்கும் என எச்சரிக்கப்பட்டே வந்தது. அதற்கான முயற்சிகளும் ஓரளவிற்கு குறிப்பிடும்படியாக மேற்கொள்ளப்பட்டும் வந்தது. ஆனால், இந்த முயற்சியில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டதே ஒழிய பொருளாதாரத் தடையில் ஏற்பட்ட நெருக்கடியினையோ அன்றி உணவுத் தடையினால் ஏற்பட்ட பற்றாக் குறையையோ பெரியளவில் நீக்குவதற்கான-ஈடுசெய்யக் கூடியதான அளவிலோ முன்னேற்றம் ஏற்படவில்லை.

உற்பத்திப் பெருக்கத்திற்கும், முயற்சிக்கும் பொருளாதாரத் தடையினால் ஏற்பட்ட மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாடு எரிபொருள் கிடைக்காமை என்பன காரணமாக இருப்பினும் மக்கள் பெருமளவு அவற்றில் கவனம் செலுத்தவில்லை என்பதும் உண்மையாகும். அத்தோடு உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு சந்தை வாய்ப்பு கிடைக்காமையும் காரணமாகும்.

உணவு நெருக்கடியைச் சமாளிக்க மக்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள் என விடுக்கப்படும் கோரிக்கைகள் தனியாக விவசாயிகளுக்கு விடுக்கப்படும் கோரிக்கை என்பதல்ல. தமிழ் மக்கள் அனைவருக்குமான கோரிக்கையே ஆகும். விவசாயிகள் தற்பொழுதும் தம்மால் இயன்ற உற்பத்தியில் ஈடுபட்ட வண்ணமேயுள்ளனர் ஆகையினால் நெருக்கடியில் இருந்து மீள வேண்டும் எனில் மக்கள் அனைவருமே உற்பத்தியில் ஈடுபட வேண்டும். ஒரு சாரார் மட்டும் ஈடுபட்டால் போதாது.

கடந்த காலத்தில் எச்சரிக்கப் பட்டும் உணவு விடயத்தில் மக்கள் தீவிர அக்கறை காட்டாதது கவலையளிக்கும் விடயமாகும். ஆனால், இனிமேலும், விட்டுவிட்டு வரும் கப்பல்களைத்தான் உணவிற்காக பார்த்திருப்போமானால், உணவு நெருக்கடிக்கு முகம் கொடுப்பதும், பட்டினிச் சாவை எதிர்நோக்குவதும் தவிர்க்க முடியாமல் போய் விடும்.

ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மண்ணை மீட்பதற்காக போராளிகள் தமது உயிரைப் பணயம் வைத்துப் போராடுகின்றார்கள். போராட்டக்களம் சென்று போராட முடியாதவர்கள் உற்பத்திப் பெருக்கத்திற்காக மண்ணுடன் போராடுங்கள். மக்கள் இதனை சவாலாக ஏற்பார்களேயானால் எந்தத் தடையும் எமது வெற்றியைத் தடுத்து விடமுடியாது.

## எமக்குச் சம்பந்தமில்லை

(கொழும்பு)

கொழும்பில் உள்ளவர்களிடம் இருந்து வடக்கிலுள்ள அவர்களது உறவினர்கள் அல்லது நண்பர்களுக்கு பொருள்களைக் கொண்டு சென்று விநியோகிக்கும் தனியாரின் நடவடிக்கை எதிலும் தாங்களோ அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கநிறுவனத்தினரோ எதுவிதத்திலும் சம்பந்தப்படவில்லை என இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்

## கல்வி அபிவிருத்திக்கு புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அடுத்துவரும் மூன்றாண்டுகளில் (1992 ஆம், 1993 ஆம், 1994ஆம்) கல்வியில் அமுல்படுத்துவதற்கு பொருத்தமான திட்டம் வரையும்பணி துரிதப்படுத்தப்பட்டு வருகின்றது

இதன்பொருட்டு கடந்த வாரம் கோட்டமட்ட ஆளணியினருக்கு 5 நாள் பயிற்சிச் செயலமர்வு இடம்பெற்றது.

இப்பயிற்றுனர்கள் அடுத்த கட்டமாக தரமுயர் கோட்ட பாடசாலை அதிபர்கள், தெரிந்தெடுத்த ஆசிரியர்கள், சேவைக்கால ஆலோசகர்கள் ஆகியோருக்கு இப்பயிற்சியை அடுத்த வாரத்திற்குள் பூர்த்தி செய்வார்கள்.

இதற்கான ஏற்பாட்டை கோட்டங்களுக்கு பொறுப்பான பிரதிக்கல்விப்பணிப்பாளரும், விசேட பாடங்களுக்கு பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளரும் மேற்கொள்ளச் செய்வர்.

கோட்டங்கள் மட்டத்திலும் யாழ்ப்பாண கல்வித் திணைக்களமட்டத்திலும் இம் மூன்றாண்டுக் கல்வி அபிவிருத்தித்திட்டம் உருவாக்கப்பட்டு அடுத்த ஆண்டு முதல் அமுல் படுத்தப்படவுள்ளது.

## பூநகரி ப. நோ. கூ. சங்கம் முழங்காவிலில் இயங்கும்

(சுச்சமோட்டை)

பாதுகாப்பு நிமித்தம் காரணமாக பூநகரி ப. நோ. கூ. சங்கம், உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் என்பன முழங்காவில் கமத்தொழில் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. மேற்படி சங்கத்தில் இருந்த உணவும் பொருள்கள், தளபாடங்கள் போன்றவை இந்த கமத்தொழில் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டிருப்பதாகவும் இந்த வாரத்தில் இருந்து சங்கம் இயங்க ஆரம்பிக்கும் என சங்கத்தின் மேற்பார்வையாளரான வே. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். பூநகரி

பில் இருந்து சுமார் 10,000க்கும் மேற்பட்ட மக்கள் முழங்காவில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. [43[

## வயோதிபர்களை மீட்டுத்தர செஞ்சிலு. கோரிக்கை

(சுச்சமோட்டை)

பூநகரி, வெட்டுக்காடு, கௌதாரிமுனை, கல்முனை போன்றபகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட வயோதிபர்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. இந்தவயோதிபர்கள் தோட்ட வேலைகளில் ஈடுபட்ட சமயம்இராணுவத்தால் கூட்டிசெல்லப்பட்டனர் என்றும். இவர்களை இராணுவத்

தினரிடம் இருந்து மீட்டு தரும் படி இவர்களது உறவினர்கள் செஞ்சிலுவைச நிறுவனத்திடம் விண்ணப்பித்துள்ளனர். (43

## பொதுக்கூட்டம்

(நமது நிருபர்)

வலைமுற்றேர் புனர் வாழ்வுச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் கடந்த 26-10-91ஆம் திகதியன்று நாவலர் வீதியில் அமைந்துள்ள சங்கப் பணி மனையில் நடைபெற்றது இக் கூட்டத்தில் நடப்பு ஆண்டிற்கான புதிய நிர்வாகிகளும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

கஷ்ட

ஒன்றை நடாத்தினர் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஊழியர்களும், அதிகாரிகளும் கலந்து கொண்ட ஊர்வலம் ஸ்ரான்லிவீதியில்உள்ள மக்கள் வங்கி முன்பாக ஆரம்பமாகி ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ். செயலகத்தை சென்றடைந்தது.

அங்கு வைத்து இவர்கள் யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைகையளித்தனர்

இது தொடர்பாக வங்கி அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் சகல அரசதிணைக்களத்தவருக்கும் அரசினால் கஷ்ட நிவாரணப்படியை வழங்க மந்திரி சபையால் சிபார்சு செய்யப்பட்ட போதும் வங்கி உயர் முகாமைத்துவத்தின் விருப்பமின்மையால் இக் கொடுப்பனவு தடுக்கப்பட்டுள்ளது. எனவே அதனை உடனடியாக பெற்றுத்தரும்படியே இந்த ஊர்வலத்தை நடாத்தினோம் எனத் தெரிவித்தார். (ச)

தொழில்

டைந்தது.

பெரும் எண்ணிக்கையில கடற்தொழிலாளர்கள் கலந்து கொண்ட இந்தஊர்வலத்தின் இறுதியில் யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அதில்,

★ கரையிலிருந்து ஐந்து மைல் தூரமான கடல் பிராந்தியத்தை அமைதிப் பிரதேசமாக்குமாறும்,

★ பொருளாதாரத் தடையை நீக்குமாறும்,

★ பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்குமாறும்,

★ இராணுவப் பிடிக்குள் சிக்கியுள்ள மீன்பிடி உபகரணங்களை மீட்டுத் தருமாறும் அதில் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது

வலிகிழக்கு, வலிவடக்கு, வடமராட்சி கடற்தொழிலாளர் சங்கங்கள் இணைந்து மேற்படி ஊர்வலத்தை நடாத்தினர்.

இராணுவ நடவடிக்கைகளால் ஐம்பதாயிரம் குடும்பங்கள் தொழிலை இழந்து வருமானம் இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

சந்திகள்

தரிப்பு, சண்டிலிப்பாய், மானிப்பாய், இருபாலை, புத்தூர், அச்சுவேலி, உரும்பிராய், கல்வியங்காடு, நீர்வேலிப் பகுதிகளிலும் வளைவுகள், பந்தல்கள், சிகரங்கள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

சிற்றூர்களைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஆகியனமாவீரர் தினத்தை மிகச் சிறப்பாக நடாத்துவதற்கான பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு படுத்தி வருகின்றன. (ச). (43(

உலக

ரான். ஆயுதம் ஏந்துகிறான்.

தமிழீழத்தில் இன்று ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆயுதமேந்தி போராடி வருகின்றனர். தமது மண் அந்நியரின் ஆக்கிரமிப்பிற்குள்ளாகியும், பல்வேறு விதமாக தமது மக்கள் ஒடுக்கப்பட்டு, நசுக்கப் பட்டுவருவதையும் உணர்ந்து, அதனை நேரடியாகவே அனுபவத்தினூடாக அறிந்து. இக்கொடுமைகளை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க இயலாத மனம் படைத்த இளைஞர்கள் இந்த அநீதிகளைக் களையும் நோக்குடன் அணிதிரண்டு கொண்டு வருகின்றனர். சொந்த நலன்களை உதறியெழுந்து, உற்றார் உறவினரின் நலன்களையும் பெரிதுபடுத்தாது ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் நலனுக்காக அவர்களை விடுவிப்பதற்காக, சுதந்திர மண்ணில் அவர்களை வாழவைப்பதற்காக எந்தவித வேதனமும் இன்றி விடுதலைக்காகவே வாழ்ந்து வீர மரணத்தை மகிழ்வுடன் தழுவியவர்கள்தான் மாவீரர்கள். இந்த மாவீரர்களின் வரலாறு தமிழீழ மக்களுக்கு மட்டும் பெருமைதரும் ஒன்றல்ல உலகில் விடுதலைக்காகப் போராடும் அனைவருக்கும் பெருமை தருவதும் உதாரணமானதுமாகும்.

உணவு

## விநியோகம் போதாது

கடந்தகால கடல் வழியாலான உணவு விநியோகம் தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் இம் மாவட்ட மக்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களில் மூன்றில் ஒரு பகுதியை மட்டுமே இவ்வாறு விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

மிகுதித் தேவையின் மூன்றில் ஒரு பகுதியை

இப் பகுதி மக்கள் நுகராமல்பட்டினி இருந்தனர் அல்லது

குறைந்த நுகர்வை மேற்கொண்டனர். அல்லது

உள்ளூர் உற்பத்திகளைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

மிகுதித் தேவையின் அடுத்த மூன்றிலொரு பகுதியை தனியார் வர்த்தகர்கள் மூலம் மாவட்டத்திற்குள் எடுத்து வரப்பட்டிருக்கின்றது. இவ் விநியோக வழி தற்போது முற்றாக ஸ்தம்பிதமடைந்திருக்கின்றது.

## கையிருப்பு இல்லை

தற்பொழுது இம் மாவட்டத்தில் கையிருப்பில் உள்ள உணவுப் பொருள்கள் மிகக் குறுகிய கால உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யக் கூடியதாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [ச]

சவர்க்கார

தாக செயலக அத்தியாவசிய சேவைகள் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒரு அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு 275 கிராம்சலவைத்தூள் பக்கற் ஒன்று ரூபா 17 50 விதமும்,

இரு அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்திற்கு 275 கிராம் சலவைத்தூள் பக்கற் ஒன்று ரூபா 17 50 விதமும்,

மூன்று அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்திற்கு 130 கிராம் சவர்க்காரம் ஒன்று ரூபா 5 50 விதமும், 50கிராம் சலவைத்தூள் பக்கற் ஒன்று ரூபா 3 25 விதமும்,

நான்கு அங்கத்தவர் கொண்ட குடும்பத்திற்கு 275 கிராம் சலவைத்தூள் பக்கற் ஒன்று ரூபா 17 50 விதமும், 50 கிராம் சலவைத்தூள் பக்கற் ஒன்று ரூபா 3.25 விதமும்,

ஐந்து அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்திற்கு 130 கிராம் சவர்க்காரம் ஒன்று ரூபா 5 50 விதமும் 50 கிராம் சலவைத்தூள் பக்கற் ஒன்று ரூபா 3 25 விதமும் வழங்கப் படவுள்ளது.

மேற்படி அட்டவணைப்படி இவ்விநியோகம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. பல நோக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் உணவு விநியோக அட்டைத் திட்டப்படி இவை விநியோகிக்கப்படவிருக்கின்றது. (ச)

# இந்தியாவின் பிடிவாதமே மாநாடு குழம்பக் காரணம்

## வெளிவிவகார அமைச்சர் ஹேரத்

(கொழும்பு)

ஏழு தலைவர்களும் கலந்து கொள்ளா விட்டால் சார்க் உச்சி மாநாட்டை நடத்த முடியாது என்று இந்தியா பிடிவாதமாக இருந்தமையே கொழும்பில் சார்க் உச்சி மாநாடு குறிப்பிட்டபடி நடத்த முடியாமற் போனமைக்கான காரணமாகும். இவ்வாறு நேற்றுப் பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டார்.

சார்க் உச்சி மாநாடு திட்டமிட்டபடி நடத்தப்படாமை சம்பந்தமாக விடுத்த அறிக்கையில் மேலும் அவர் குறிப்பிடுகையில் பூட்டான் மன்னருக்கு அக்டோபர் பன்னிரண்டாம் திகதியன்று புதுடில்லியிலுள்ள இந்தியத் தூதுவர் நேரில் சென்று அழைப்பிதழைக் கையளித்தார் எனவும், நேரில் சென்று அழைக்காமை தான் வராமைக்கு காரணம் என்பது அபத்தமானது எனவும் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் நவம்பர் முதலாம் திகதியன்று பூட்டான் மன்னர் அனுப்பிய செய்தியில் தமது நாட்டின் தென் பகுதியில் ஏற்பட்டுள்ள நிலைமைகளால் மாநாட்டிற்கு வர முடியாதிருப்பதாக குறிப்பிட்டிருந்தார். எனினும், நவம்பர் நான்காம் திகதி பூட்டான் வெளியுறவு அமைச்சர் மாலைதீவு ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டுபூட்டான் மன்னரின் பிரதிநிதி கலந்து கொள்வது பற்றி ஏனைய தலைவர்களின் அபிப்பிராயத்தைப் பெறும்படி கோரினார். ஆனால் இந்தியா சகல தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பிரேமதாசா இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் நேரடியாக தொடர்பு கொண்ட போதிலும் இந்தியா தனது நிலையை தளர்த்தவில்லை எனவும் குறிப்பிட்டார்.

# இராமேஸ்வரக் கரையில் 4 இலங்கையர் கைது

(சென்னை)

இராமேஸ்வரத்துக்கருகேயுள்ள பாம்பன் கிராமத்திலுள்ள கலங்கரை விளக்கத்திற்கு சமீபமாக நான்கு இலங்கைத் தமிழர்களும், அவர்கள் பயணம் செய்த வெளி இணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட படகு ஒன்றும் கடலோரக் காவல்படையினரால் நேற்று கைப்பற்றப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இலங்கைக்கு ஆயுதங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இப்படகில் இருந்தவர்கள் எடுத்துச் செல்வதைக் கடலோரக் காவற்படையின் ஹெலிகப்டர்கள் கண்டதைத் தொடர்ந்து அத்தியாவசியப் பொருள்களையும் ஆயுதங்களையும் கடலில் தூக்கி வீசினர் என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர். கைது செய்யப்பட்ட நால்வரில் இருவர் தமிழக அகதிமுகாம்களில் தங்கியிருந்தவர்கள் என்றும், மேலும் இருவர் தப்பிவிட்டனர் என்றும் அதிகாரிகள்கூறியுள்ளனர்

# கூ. சங்கங்களின்நெருக்கடி; இன்று கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருள்கள் விநியோகிப்பதில் எதிர்நோக்கும் கஷ்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கென கலந்துரையாடல் ஒன்று இன்று காலை ஒன்பது மணிக்கு யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் நடைபெற உள்ளது. இக் கலந்துரையாடலில் மேலதிக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தேவநேசன் நேசையா அவர்களும் கலந்து கொள்ளவுள்ளதால் அனைத்து ப. நோ. கூ. சங்கத் தலைவர்களையும் தவறாது சமூகமளிக்கும்படி யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கனகசெந்திநாதன் நினைவுப் பேருரை

பழமைக்கும், புதுமைக்கும் ஒரு பாலம் என்ற தலைப்பில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு திரு. ஏ. ஜே. கனகரட்ணா அவர்கள் இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவுப்பேருரைஒன்றுநிகழ்த்தவுள்ளார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரின் ஏற்பாட்டில் நல்லூர் அம்மன் கோட்டத்தில் நிகழவிருக்கும் இந்நிகழ்ச்சிக்கு பிரதி கல்விப் பணிப்பாளர் ஆ. தம்பித்துரை தலைமை ஏற்கிறார்.

நினைவுப் பேருரையைத் தொடர்ந்து கலை இலக்கியத்துறையில் இன்றைய எதிர்பார்ப்புகள் என்ற தலைப்பில் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது. இக்கருத்தரங்கில் ஏ. ரி பொன்னுத்துரை, செம்பியன் செல்வன், நவாலியூர் சச்சிதானந்தன், அ. யோகராசா, க. சொக்கலிங்கம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

# வீரப்பனைப் பிடிக்க இராணுவ உதவி?

(சென்னை)

சந்தனக் கட்டைகள் கடத்துவதில் பிரபல்யமான வீரப்பனைப் பிடிக்க இராணுவத்தின் உதவியை நாடலாமா என்பது குறித்து கர்நாடக - தமிழக மாநிலங்களின் அமைச்சரவை மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றது.

கர்நாடக - தமிழ்நாடு மாநிலங்களில் சந்தனக் கட்டை கடத்துவதாகவும் வனத்துறை அதிகாரிகளை சுட்டுக் கொன்றுள்ளதாகவும் வீரப்பன் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

# தமிழ் நாட்டில்

# இல. அகதிகளை மிரட்டி பலவந்த கையெழுத்து

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை தமிழ் அகதி மக்களை வற்புறுத்தி இலங்கைக்கு அனுப்பும் நடவடிக்கைக்காக இலங்கைத் தமிழ் மக்களிடமிருந்து பலவந்தமாக கையெழுத்துப் பெறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதி மக்கள் தங்கியுள்ள முகாம்களுக்கும் வீடுகளுக்கும் செல்லும் தமிழக பொலிசாரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அகதி மக்களை மிரட்டி நீங்கள் கட்டாயம் இலங்கை செல்லத்தான் வேண்டும் என்று மிரட்டுவதோடு அவர்களிடமிருந்து நாடு திரும்புவதற்கான சம்மதம் பெறும் பத்திரத்தில் கையெழுத்துப் பெறப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதன் காரணமாக விருப்பமில்லாத நிலையில் அதிகாரிகளினதும், பொலிசாரினதும் மிரட்டலுக்கு அஞ்சி அகதிமக்களில் பலர் கையெழுத்திட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# ஆர்ப்பாட்டம்

துப்பாக்கி

முதல் பலத்த துப்பாக்கிப் பிரயோகத்தையும் எறிகணைத் தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர். பொது மக்கள் குடியிருப்புக்களைநோக்கி நடத்தப்பட்ட இத் தாக்குதல்களால் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

வன்னியில்

கோழியகுளம், மகிழங்குளம் ஆகிய பகுதிகளிலும் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல்களை நடத்தின. இதேபோல் சிலாபத்துறைப் பகுதியிலும் குண்டு வீச்சுகள் நடத்தப்பட்டுள்ளது.

ஆவேச

றடைந்த இவ் ஊர்வலங்கள் அங்குள்ள அரசஅதிபரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

உயர் அதிகாரிகள் கூட்டம்

இவ்வேளையில் யாழ். செயலகத்தினுள் அரச அதிபருடனும் அதிகாரிகளுடனும் வடக்கு கிழக்குக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தேவநேசன் நேசையா முக்கிய கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார்

கண்ணாடிகள் நொருங்கின

கூட்டம் நடந்த மாநாட்டு மண்டபத்தை முற்றுகையிட்ட ஒருபகுதி மக்கள் ஆத்திரம் கொண்டு காரியாலயக் கண்ணாடிகள் பலவற்றை உடைத்தெறிந்தனர். இதனால் கூட்டம் இடையில் குழம்பியது.

பின்னர் அதிகாரிகள் சிலர் தலையிட்டு தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இதனைத் தொடர்ந்து மாடியில் இருந்து தொழிலாளர் கீழ் இறங்கி வந்தமையாலும் தமக்கு உரிய பதில் கிடைக்கும் வரை செயலகத்தைவிட்டு வெளியேற மறுத்தனர்.

இதனைத் தொடர்ந்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து தொழிலாளரின் மகஜரைப் பெற்றுக்கொண்டார்.

நேற்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களினால் யாழ். செயலகம் பல மணி நேரம் செயலிழந்தது.

உணவைவிடு

பாட்டம் செய்தனர்.

வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர், சங்கம் கடற்தொழிலாளர் சங்கம் இடம்பெயர்ந்தோர் ஒன்றிணைந்து நேற்றுகாலை ஒன்பதுமணிக்கு யாழ் நகர சத்திரத்துச் சந்தியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு யாழ் செயலகத்தை வந்தடைந்தனர். ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் முடிவில் வடக்கு-கிழக்கு மாகாண அத்தியாவசியசேவைகள்ஆணையாளர் தேவநேசன் நேசையாவிடம் இவர்கள் தத்தமது மகஜர்களைத் தனித்தனியே கையளித்தனர்.

இம்மகஜரில்

★ கடற்பரப்பில்நிலைகொண்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெறுமாறும்

★ இலவச நிவாரணத்தை தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் வழங்குமாறும்

★ இறங்குதுறைகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வாபஸ்பெறுமாறும்

★ தரமான உணவுப்பொருள்களை வழங்குமாறும்

★ தடையின்றி தொழில்புரிய கடற்பரப்பினை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்துமாறும் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டதாக தெரிகின்றது.

மகஜரைப் பெற்றுக்கொண்ட தேவநேசன் நேசையா ஒரு வாரத்திற்குள் கொழும்பில் உயர் அதிகாரிகளுடன் இது சம்பந்தமாகத் தொடர்பு கொண்டு உங்கள் குறைகள் அனைத்தையும் போக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வேன் என உறுதி அளித்தார்.

அதனைத் தொடர்ந்து அங்கு குழுமியிருந்த மக்கள் ஒரேகுரலில் இக் கோரிக்கைகள் அனைத்தும் வாக்குறுதி அளித்தபடி ஒருவாரத்திற்குள் நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் செயலகம் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களை மூடி தமிழர் பிரச்சினைகளை உலகறிய எடுத்துரைக்க வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது கை யாலாகாத் தனத்தை ஏற்றுப் பதவி துறக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

இவர்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திலும்மகஜர் ஒன்றைக் கையளித்தனர். (ச)

வீரமரணம்

தப்பிவரும்போது வீரமரணமடைந்தவீரவேங்கைசெங்கதிர் (கந்தையா துரைரத்தினம்) என்பவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைச் செலுத்தியுள்ளனர்.

அரச சார்

நிலைமை

★ இடம் பெயர்ந்த மக்களின் நிலைமை

★ அகதி முகாம்களை அமைத்தலும் பராமரித்தலும்

★ தொழில் இழந்த மக்களின் நிலை.

★ மருத்துவ, சுகாதாரநிலை ஆகிய விடயங்கள்தொடர்பாக விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது (சு)

# அம்பாறையில்தொடர்ந்தும் திட்டமிட்ட குடியேற்றம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் தமிழரைச் சிறுபான்மையினர் ஆக்குவதற்குச் சிங்களவரின் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன.

அம்பாறையில் தெய்யந்த கண்டி என்ற பகுதி ஒன்றை ஏற்படுத்தி அப்பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு குடியேற்றம் நடைபெற்று வருகிறது.

# மட்டக்களப்பில் தொடர்ந்து தமிழர்கள் பலர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும், ஏனைய தமிழ்க்குழுக்களும் இணைந்து தமிழ் மக்களை தாக்கியும் கைது செய்தும் வருகின்றனர். கடந்த எட்டாம் திகதி களுவன்கேணிப் கிராமத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் கணபதிப்பிள்ளை [20) கதிர்காமத்தம்பி (23) கிருஷ்ணபிள்ளை இராமன் (19) முத்தையா அருள் [18) கணபதிப்பிள்ளை இராசா (21) வீரசிங்கம் ரவி (23) கணபதிப்பிள்ளை இராசதுரை (28) நடராசா சின்னவன் (19) ஆகியோரைத் தாக்கி கைது செய்து முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர். இதுவரை இவர்கள் பற்றிய தகவலேதும் தெரியவரவில்லை.

நேரசூசியில்

விநியோகிக்கப்பட்டன. வினாத்தாள்கள் விநியோகிக்கப்பட்டபிறகு அறிவித்தல்கிடைத்தமையால் பல பாடசாலைகளில் விநியோகிக்கப்பட்ட கணித வினாத்தாள்கள் திரும்பப் பெறப்பட்டன பதிலாகத் தொழில் நுட்பப் பாட வினாத்தாள்கள் பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

இதனால் கணித பாடத்துக்கு ஆயத்தம் செய்து வந்த மாணவர்கள் ஏமாற்றமடைந்ததாக ஆசிரியர் தரப்பில் சொல்லப்படுகிறது. ஆயத்தம் செய்யாத தொழில் நுட்ப பாடத்துக்கு மாணவர் தோற்ற வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. கணித வினாத்தாள்களைக் கொடுத்து மீளப் பெற்றதன்மூலம் பரீட்சையின் இரகசியத் தன்மை பேணப்படுவது தவறிவிட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கணிதபாடம் நாளை 14ஆம் திகதி காலை நடைபெறும் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது